செய்தி வெளியீடு எண்: 454 நாள்: 21.09.2016

# செய்தி வெளியீடு

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் இன்று (21.9.2016) தலைமைச் செயலகத்தில், தமிழ்நாட்டின் 13 கடலோர மாவட்ட கடற்பகுதிகளில் கடற்பாசி பயிரிடும் திட்டத்தினை காணொலிக் காட்சி (Video Conferencing) மூலமாக துவக்கி வைத்து, தூத்துக்குடி மாவட்டம், புன்னகாயல் கிராமத்தைச் சேர்ந்த 5 மீனவ மகளிர் அம்மா குழுக்களுக்கு கடற்பாசி வளர்க்கும் திட்டத்திற்காக தலா ஒவ்வொரு மீனவ மகளிர் அம்மா குழுக்களுக்கும் 4 லட்சத்து 50 ஆயிரம் ரூபாய் நிதியுதவிக்கான ஆணைகளை வழங்கினார்கள்.

தமிழ்நாட்டின் கடல் பகுதிகளில் கடற்பாசிகள் அதிக அளவில் காணப்படுகின்றன. இந்த கடற்பாசிகளிலிருந்து தயாரிக்கப்படும் ‘‘கராகீனன்’’ என்பது ஒரு வகையான மாவுப்பொருள் ஆகும். உணவு, ரசாயனம், மருந்து மற்றும் அழகுச் சாதன தயாரிப்பு பொருட்களிலும், ஐஸ்கிரீம் மற்றும் பற்பசை தயாரிப்பிலும் பயன்படுத்தப்படுகிறது. விவசாய பயிர்களுக்கு தேவையான அனைத்து ஊட்டச் சத்துக்களும் கடற்பாசியில் இருப்பதால், இதனை விவசாயிகள் இயற்கை உரமாகவும் பயன்படுத்துகின்றனர். இதன் உற்பத்தி இந்தியாவில் குறைவாக இருப்பதால், ஆண்டு ஒன்றுக்கு சுமார் 1500 டன் ‘‘கராகீனன்’’ வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்படுகிறது.

தமிழ்நாட்டில் கடற்பாசி உற்பத்தியை பெருக்குவதற்காக தமிழ்நாட்டின் கடலோர மாவட்ட கடற்பகுதிகளில் ஆழம் குறைந்த பகுதிகளில் கடற்பாசி பயிரிட திட்டமிடப்பட்டுள்ளது. இது முற்றிலும் மீனவ மகளிர் குழுக்களின் மூலம் ஒப்பந்த முறையில் இந்தியாவிலேயே முன்னோடி திட்டமாக செயல்படுத்தப்படுகிறது.

மீனவ மகளிர் வாழ்வாதாரத்தை உயர்த்திடும் வகையில் தமிழ்நாட்டின் கடலோர மாவட்ட கடற்பகுதிகளில் கடற்பாசி பயிரிடும் திட்டத்தினை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் இன்று தலைமைச் செயலகத்தில், காணொலிக் காட்சி மூலமாக துவக்கி வைத்து, தூத்துக்குடி மாவட்டம், புன்னகாயல் கிராமத்தைச் சேர்ந்த ஒவ்வொரு மீனவ மகளிர் அம்மா குழுக்களுக்கும் 4 லட்சத்து 50 ஆயிரம் ரூபாய் வீதத்தில் 5 மீனவ மகளிர் அம்மா குழுக்களுக்கு 22 லட்சத்து 50 ஆயிரம் ரூபாய் நிதியுதவிக்கான ஆணைகளை வழங்கினார்கள்.

கடற்பாசி பயிரிடும் திட்டத்திற்காக மீனவ மகளிர் அம்மா குழுக்களுக்கான திட்ட உதவித் தொகை 4 லட்சத்து 50 ஆயிரம் ரூபாய் ஆகும். இதில் தமிழக அரசின் மானியமாக 2 லட்சத்து 25 ஆயிரம் ரூபாயும், மீதமுள்ள 2 லட்சத்து 25 ஆயிரம் ரூபாய் பாங்க் ஆப் இந்தியா மூலம் கடன் பெறுவதற்கும் இத்திட்டத்தில் வழிவகை செய்யப்பட்டுள்ளது.

கடற்பாசி பயிரிடும் திட்டத்திற்கு தேவையான கடற்பாசி (Sea Weed) விதைகளை வழங்குவதற்கும், அதனை விற்பனை செய்வதற்கும் இத்திட்டத்தின் மூலம் வழிவகை செய்யப்பட்டுள்ளது. ஒரு குழுவிற்கு ஐந்து மூங்கில் மிதவைகள் (racks) மூலம் 60 கிலோ விதையில் பயிர் செய்து 46வது நாளில் 260 கிலோ முதல் 300 கிலோ வரையிலான கடற்பாசியினை அறுவடை செய்யலாம். இக்குழுக்களுக்கு தமிழ்நாடு மீன்வளக் கல்லூரி தொழில்நுட்ப உதவி வழங்கும். இக்குழுக்களால் வளர்க்கப்படும் கடற்பாசியை தனியார் நிறுவனங்கள் வாங்க வகை செய்யப்பட்டுள்ளது.

இந்த நிகழ்ச்சியில், மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் திரு. டி. ஜெயக்குமார், மாண்புமிகு பால்வளம் மற்றும் பால் பண்ணைகள் மேம்பாட்டுத் துறை அமைச்சர் திரு.கே.டி. ராஜேந்திரபாலாஜி, மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் திரு. பி. பாலகிருஷ்ணா ரெட்டி, தலைமைச் செயலாளர் முனைவர் பா. இராம மோகன ராவ், இ.ஆ.ப., தமிழ்நாடு அரசு ஆலோசகர் திருமதி ஷீலா பாலகிருஷ்ணன், இ.ஆ.ப., (ஓய்வு), கால்நடை பராமரிப்பு, பால்வளம் மற்றும் மீன்வளத் துறைச் செயலாளர் திரு. ககன்தீப் சிங் பேடி, இ.ஆ.ப., பேங்க் ஆப் இந்தியா பொது மேலாளர் திரு. குல்பூஷன் ஜெயின், துணை பொது மேலாளர் திரு. கே.எஸ்.எம். சாஸ்திரி, முதுநிலை மேலாளர் திரு. ஜான் பிரிட்டோ மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

*****

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை –9.
நாள் : 21.9.2016